සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 07	முதலாம் தவணைப் பரீட்சை - 2019	33	T	

சுட்டெண் .....

வரலாறு

நேரம் 2 மணித்தியாலம்

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இல. 01 முதல் 05 வரையான வினாக்களுக்குரிய மிகச் சரியான விடையினை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

01. புராதன இலங்கை மக்கள் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை ..... எனக் குறிப்பிட்டனர்.
(சேனைபயிர்ச்செய்கை / சேற்று நிலப் பயர்ச்செய்கை / நெற்பயிர்ச் செய்கை)

02. சேனைப்பயிர் செய்கையை ..... "சேன்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
(கல்வெட்டில் / உம்மக்க ஜாதக நூலில் / சிஹல வஸ்து நூலில்)

03. நீர்பாசனத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றிய காரணத்தால் ..... "மின்னேரியா தெய்வம்" எனப் போற்றப்பட்டான்.
(காவந்தீஸ மன்னன் / துட்டகைமுணு மன்னன் / மகாசேன மன்னன்)

04. அநுராதபுரக்காலத்தில் உள்நாட்டு வர்த்தகம் சம்பந்தமான வணிகக் கிராமம் ..... எனக் குறிப்படப்பட்டது.
(பட்டாணகம் / புக / நிகம்)

05. வசப மன்னன் ..... வம்சத்தைச் சேர்ந்தவன் ஆவான்.
(மௌரிய / இலம்பகர்ண / மானவர்ம)

- **இல. 06 முதல் 10 வரையுள்ள வினாக்ககளில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையெனின் (✗) எனவும் அடைப்புக்குறிக்குள் இடுக.**

06. தோணிகல கல்வெட்டில் சிறுபோகத்தை அகலஹஸ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ( )

07. இலுப்பெண்ணெய்யில் ஊறவைத்த திரிகளை வயலில் எரிப்பது ஈக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய பாரம்பரிய முறையாகும். ( )

08. புராதன விவசாயிகள் பசுவிலிருந்து ஐந்து பொருட்களைக் பெற்றுக் கொண்டனர். இதனை பஞ்சரப் பொருட்கள் எனக்குறிப்பிட்டனர். ( )

09. முற்காலத்தில் செப்புலோகத் தொழில் புரிந்தவர்களை லோகுரு என அழைக்கப்பட்டனர். ( )

10. இலங்கையில் வர்த்தகம் விருத்தியடைந்தவுடன் தோன்றிய வணிக நகரங்கள் "நிகம்" என அழைக்கப்பட்டது. ( )

- **இல. 11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. உருவில் காணப்படும் உபகரணங்கள் பின்வரும் எத்தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டது?
1. விவசாயம்
2. விலங்கு வளர்ப்பு
3. வெளிநாட்டு வர்த்தகம்
4. உள்நாட்டு வர்த்தகம்



12. புராதன இலங்கையில் வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் வேறு குழவினராக தனி அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு செயற்பட்டனர். இவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்னர்?
1. வலஞ்சியார்
2. புக
3. நானாதேசி
4. நிகம்

13. இலங்கை புராதன காலத்தில் வெளிநாட்டு வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட முக்கியமான துறைமுகம் யாது?
    1. அநுராதபுரம் 2. மாகம 3. கொடவாய 4. பொலன்னறுவை

14. அநுராதபுரக்காலத்தில் ஆட்சி செய்த 8ஆம் அக்ரபோதி மன்னன் தனது தாயாருக்கு புரிந்த பணிவிடைகள் பற்றி குறிப்பிடும் மூலாதாரம் எது?
    1. தீபவம்சம் 2. மகாவம்சம்
    3. சிஹலவஸ்துப்பகரண 4. சூழவம்சம்

15. இலங்கையின் 1ம் சேன மன்னனின் ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவில் மேலோங்கியிருந்த இராச்சியம் யாது?
    1. பல்லவ இராச்சியம் 2. சென்னை
    3. பாண்டிய இராச்சியம் 4. சோழ இராச்சியம்

- **இல. 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் அட்டவணையைக் கொண்டு விடையளிக்குக.**

கைத்தொழில்	கைவினைஞர்	உற்பத்திப் பொருட்கள்
16.	கும்பகார	17. .....
பஞ்சு	18.	துணிமணிகள்
19.	சுவர்ணகார	20. .....

(2x20=40 புள்ளிகள்)

* * * * *

பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. புராதன விவசாயிகள் தமது தொழிலுடன் தொடர்புடைய சில சொற்களைப் பயன்படுத்தினர் அல்லது பின்வரும் கூற்றுக்களுக்குரிய புராதன சொற்பிரயோகத்தை இடைவெளியில் எழுதுக.

அ) i. பானை ஒன்றைத் தலையாகக் கொண்டு செய்யப்பட்ட வெருளி .....


ii. காடுகளுக்குத் தீயிட முன்னர் அங்குள்ள விலங்குகளை விரட்டுவதற்கு ஒலி எழுப்புதல். .....

iii. பாலைப் பெற்றுக் கொள்வதற்காக வளர்க்கப்பட்ட பசுக்கள்.....

iv. வெறிநாட்டு வர்த்தகர்கள் ஒன்றுபட்ட செயற்பட்ட பல்வேறு வர்த்தக அமைப்பு .....

(பு. 04)

ஆ) பின்வருவன சேனைப்பயிர்ச்செய்கையின் போது பயிரிடப்பட்ட சில பயிரினங்கள் அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ளன. இங்குள்ள இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.



(பு. 04)

இ) பின்வரும் சம்பவங்களுக்குரிய மன்னர்களை முன்னால் உள்ள இடைவெளியில் எழுதுக.

I. பல்லவ அரசனான 2ஆம் நரசிங்கவர்மனிடம் உதவி பெற்று 2ம் தடோபதிஸ்ஸ மன்னனுக்கு எதிராக போர் தொடுத்த மன்னன் .....

ii. ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லப மன்னன் இலங்கையை ஆக்கிரமித்தபோது இந்நாட்டின் ஆட்சியாளன். .....

iii. குட்டக எனும் தளபதியின் தலைமையில் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்த ஆட்சியாளன். .....

iv. மிஹிந்தலையில் வைத்திய மனையைத் தாபித்த மன்னன்.....

(பு. 04)

ஈ) பின்வரும் அட்டவணையில் சட்டமும் அவை குறிப்பிடப்பட்ட கல்வெட்டுக்களும் அடங்கியுள்ளன. இவற்றிலுள்ள இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.

சட்டங்கள்	கல்வெட்டுக்கள்
1. பத்துக்கிராம நிர்வாகம் மற்றும் குற்றவியல் வழக்குகளைத் தீர்த்தல் சம்பந்தமான கூடம்.	.....
2. அரச அதிகாரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் விசேட வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டமை சம்பந்தமான சட்டம்	.....
3. அடிப்படை முகாமைத்துவம் சம்பந்தமான சட்டம்	.....
4. விகாரைச் செயற்பாடுகளுக்காக நாள்தோறும் செலவாகும் செலவினை எழுதி வைத்த புத்தகம்	.....

(பு. 04)

02. I. பின்வருவன சேனைப்பயிர் செய்கையுடன் தொடர்புடைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சொற்கள் சிலவாகும். இவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள மூலாதாரங்களைப் பெயரிடுக.

A. சேனையை "பிட்டபிம்" எனக் குறிப்பிடுவது
B. குடும்பம் ஒன்றின் சகோதரர்கள் ஐவர் சேர்ந்து காடு ஒன்றைச் சுத்திகரித்து உளுந்து பயிரிட்டதாக குறிப்பிடவது
C. சாலிய குமாரன் பிநற்ற காலத்தில் கரைநெல் பேரளவில் விளைந்ததாகக் குறிப்பிடுவது.

ii. 1) படத்தில் காட்டப்பட்டுள்ளது யாது?
2) இதனை எப்பயிர்ச்செய்கையின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படுகிறது?
3) இதனைக் குறிப்பிட் புராதனகால விவசாயிகள் பயன்படுத்திய சொற்பிரயோகம் யாது?
4) சேனையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு விவசாயிகள் கையாண்ட வழிமுறையொன்றைக் குறிப்பிடுக.

(பு. 04)



iii. மத்திய ஆட்சியின் போது பின்வரும் கடமைகள் சம்பந்தமாக காணப்பட்ட அதிகாரிகள் யாவர் என்பதனை முன்னால் உள்ள இடைவெளியில் எழுதுக.

1) எதிர்கால அரசனாகும் உரிமை பெற்றவன்.....
2) ஆவண நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதானி.....
3) குதிரைகள் குறித்த விடயங்களுக்கான பிரதானி.....
4) யானைகள் குறித்த விடயங்களுக்கான பிரதானி..... (பு. 04)

03. I. பின்வருவன புராதன விவசாயிகள் வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு பயன்படுத்திய போகங்கள் சம்பந்தமானது. இவ்வட்டவணையிலுள்ள இடைவெளிகளை உரிய சொற்கள் இட்டு நிரப்புக.

<u>கல்வெட்டில் குறிப்பிடல்</u>	<u>தற்காலத்தில் குறிப்பிடல்</u>
அகலஹஸ	1. .....
2.	இடைப்போகம்
பிட தட ஹஸ	3. .....

(பு. 03)

ii. புராதன கால விவசாயிகள் வயல் ஒன்றை தயார்படுத்தும் போது சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு மேற்கொண்ட நடவடிக்கைகள் 4 தருக. (பு. 04)

iii. அ) புராதன விவசாயிகள் நெல்லை உணவுக்காக பயன்படுத்திக் கொள்ளும் போது பச்சையரிசி, புழுங்கல் அரிசி என பதப்படுத்திக் கொண்ட முறைகளைக் குறிப்பிடுக. (பு. 02)

ஆ) புராதன விவசாயிகள் அடுத்த போகத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளப்படும் வரை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கை யாது? (பு. 02)


04. I. பின்வருவள விலங்கு வளர்ப்பு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சிலவாகும். இவற்றுக்கு வழங்கப்பட்ட சொற்களை முன்னால் எழுதுக.

A - மாட்டை வளர்ப்பவர்கள் .....
B - போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்ட மாடுகள் .....
C - மாடுகளின் முதுகில் பொருட்களை ஏற்றிச் செல்வது ..... (பு. 03)

ii. 1) பின்வரும் உருவில் காணப்படும் உபகரணம் யாது?

2) இது எவ்விவசாயத்துக்கு பயன்படுத்தினர், என்பதுடன் அதன் பயன்பாடும் யாது?

3) புராதன கால மக்கள் மாடுகளையும் கோழிகளையும் வளர்க்கப்பட்டமையால் பெற்றுக் கொண்ட பயன்கள் இரண்டு வீதம் தருக.



i. மாடுகள் 1. .....
2. .....

ii. கோழிகள் 1. .....
2. .....

05. i. முற்கால மனிதர்கள் உலோகக் கைத்தொழிலில் பொருட்களை உற்பத்தி செயவதற்குப் பயன்படுத்திய உலோகங்கள் 3 தருக. (பு. 03)

ii. பின்வரும் அட்டவணையில் பல்வேறு கைத்தொழில்களில் பயன்படுத்திய உபகரணங்கள் காட்டப்பட்டுள்ளன. இவ்வுபகரணங்களின் உதவியுடன் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

கைத்தொழில்	கைவினைஞர்	உற்பத்திப்பொருட்கள்	உபகரணம்
1.	லோகுரு	2.	
3.	கும்பலலு	4.	

(பு. 04)

iii. புராதன கால கைவினைஞர்கள் மேற்கொண்ட விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள் 2 குறிப்பிட்டு அதன் மூலம் உற்பத்தி செய்த பொருட்கள் 2 இனைக் குறிப்பிடுக. (பு. 04)

06. i. இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருப்பதால் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட நாடுகள் 3 தருக. (பு. 03)

ii. எமது நாடு வெளிநாடுகளுடன் மேற்கொண்ட வர்த்தகம் சம்பந்தமான பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்	ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்
1.	.....
2.	.....
3.	.....
4.	.....
5.	.....

(பு. 04)

iii. புராதன சமூகத்தில் மரணச்சடங்கு நடவடிக்கைகளில் அயலவர்கள், உறவினர்களுடன் மிக உயர்ந்த பண்புகளை வெளிக்காட்டிய சந்தர்ப்பங்கள் 2 இனைக் குறிப்பிட்டு விளக்குக. (பு. 04)


07. i. பின்வருவன அநுராதபுர காலத்தில் இடம்பெற்ற சில முக்கிய சம்பவங்களாகும். இவற்றுள் மானவர்ம மன்னனின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் 3 இனை எடுத்து எழுதுக.

* 1ம் நரசிங்கவர்மன் அரசனுக்கு சேவை செய்தல்.
* இலங்கை பாண்டியர்களால் ஆக்கிரமிக்கப்படல்.
* மகாவலி கங்கையில் மினிப்பே எனும் பிரதேசத்தில் அணையொன்றைக் கட்டுதல்.
* ஹத்ததாட மன்னனைத் தோற்கடித்தல்.
* பாண்டிய மன்னனுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல்.
* நாட்டில் மரபு ரீதியான நிர்வாக முறையொன்றை ஏற்படுத்தல். (பு. 03)

ii. அநுராதபுரக்காலத்தில் அரசர்கள் நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய பின்வரும் தகவல்களை பூர்த்தி செய்க.

A - அரசனின் படை
B - நகர நிர்மாணம்
C - உள்நாட்டு வெளிநாட்டு பகைவர்களின் தொல்லைக்கு முகம் கொடுக்க கையாண்ட பாதுகாப்பு உபாயம் (பு. 03)

iii. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புக.



மேலிருந்து கீழ்

1. பண்டுகாபய மன்னன் சிறு பராயத்தில் வாழ்ந்த கிராமம் இவ்வாறு அழைக்கப்படும்.
2. நெற்பயிர்ச் செய்கையில் பெரும் போகத்தை கல்வெட்டில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இடமிருந்து வலம்

3. சாலிய இளவரசனின் மனைவி.
4. பத்துக் கிராமங்களுக்கு ஒரு வைத்தியசாலையைக் கட்டிக் கொடுத்த மன்னன்.
5. மானவர்ம மன்னனின் ஆட்சிக்கு முன்னராக ஆட்சி செய்த மன்னன். (பு. 05)

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
முதலாம் தவணைப் பரீட்சை - 2019
தரம் 07 - வரலாறு
விடைப்பத்திரம்

பகுதி I

வினா இல.		விடை	வினா இல.		விடை
1.		சேனைப்பயிர்ச் செய்கை	2.		உம்மக்க ஜாதக
3.		மகாசேனன்	4.		பட்டாணகம்
5.		இலம்பகர்ண	6.		பிழை
7.		சரி	8.		சரி
9.		பிழை	10.		சரி
11.		விவசாயம்	12.		புக
13.		கொடவாய	14.		மகாவம்சம்
15.		பாண்டிய இராச்சியம்	16.		களிமண்
17.		சட்டி, பானை	18.		பெஹெகார
19.		தங்கம்	20.		மாலை, வளையல்

பகுதி II

01.	அ)	i.		ஹெலிகடா	
		ii.		கினியாதிகால	
		iii.		கிரிகெரி	
		iv.		வலஞ்சியார் / நானாதேசி	
	ஆ)	i.		திணை	
		ii.		குரக்கன்	
		iii.		வட்டக்கா	
		iv.		சிறுகிழங்கு	
	இ)	i.		மானவர்மமன்னன்	
		ii.		1ம் சேனன்	
		iii.		2ம் சேனன்	
		iv.		2ம் சேனன்	
	ஈ)	i.		வேவெலகெடிய	
		ii.		அந்தானி தூண்	
		iii.		மிஹிந்தலை சுவர்க்கல்வெட்டு	
		iv.		பஞ்ஷீகா புத்தகம்	
02.		i.		A. கல்வெட்டு B - மகாவம்சம் C - சீஹலவத்து	
		ii.	1.	பானையொன்றைத் தலைமையாகக் கொண்டு செய்யப்பட்ட வெருளி	
			2.	சேனைப்பயிர்செய்கை	
			3.	ஹெலிகடா	
			4.	கம்புகளினால் வேலியை அமைத்தல், பாதுகாப்பிற்காக தீயை மூட்டுதல், குடிசையில் தங்கியிருந்து பயிர்களைப் பாதுகாத்தல்.	
		iii.	1.	யுவராஜன் 2. ஆவணப்படுத்துபவர்	
			3.	அஷ அதெக 4. அதி அதிக	
03.		i.	1.	பெரும்போகம் 2. மெதஹஸ 3. சிறுபோகம்	
		ii.	*	நிலம் புரட்டப்படுவதால் புற்பூண்டுகள் நசுக்கப்பட்டு இயற்கையான பசளையாக	

				மாறும்.	
			*	கிருமிகளை அழிக்க பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தல்.	
			*	மனித உழைப்பு கூடுதலாகப் பயன்படுத்தல்.	
			*	நெற்கதிர்களை அமைத்து நெல் பாதுகாக்கப்படல்.	
		iii.	அ)	பச்சை அரிசி - அவிக்காத நெல்லைக் குத்தி பச்சையரிசியை பெற்றுக் கொண்டனர். புழுங்கல் அரிசி - நெல்லை அவித்து, உலர்த்தி, குற்றிப் புழுங்கல் அரிசியைப் பெற்றுக் கொண்டனர்.	
			ஆ)	நெற்கதிரைத் தயாரித்து பாதுகாத்தல்.	
04.		i.		A - கோபாலர்கள் B - குயவன் C - தவளம்	
		ii.		1. அரிவாள் 2. நெல் விவசாயம், நெற்கதிரை வெட்டுவதற்கு	
		iii.	1)	போக்குவரத்துக்கு, விவசாயம் செய்ய, பாலைப் பெற	
			2)	கோழிகள் - முட்டை பெற, இறைச்சிக்கு	
05.		i.		இரும்பு, தங்கம், செம்பு, வெள்ளி	
		ii.	1.	உலோகம் 2. இரும்புப் பொருள் (மண்வெட்டி, கத்தி)	
			3.	களிமண் 4. சட்டி பானை	
		iii.		கரும்பு - பாணி, கருப்பட்டி கைத்தொழில் பருத்தி - பிடவைக் கைத்தொழில்	
06.		i.		இந்தியா, சீனா, உரோம், பாரசீகம், அரேபியா	
		ii.		இறக்குமதி : பீங்கான், பட்டாடை, வாசனைப் பொருட்கள், குதிரைகள் ஏற்றுமதி : யானைத்தந்தம், முத்து, மாணிக்கம், வாசனைத் திரவியங்கள்	
		iii.	*	மரணச் சடங்கு சம்பந்தமாக பணம் வழங்குதல்.	
			*	பொருட்கள் வழங்குதல்.	
			*	மரணச் சடங்கில் ஊர்வலங்களில் வாத்தியங்கள் முழங்குவது இல்லை.	
07.		i.	*	1ம் நரசிங்கவர்ம மன்னனுக்கு பணிவிடை செய்தல்.	
			*	ஹத்தாதட மன்னனை தோற்கடித்தல்.	
			*	நாட்டின் பாரம்பரிய ஆட்சி முடியை மீண்டும் ஏற்படுத்தல்.	
		ii.		A. அரசனின் படை : யானை, குதிரை, இரதம், காலாட்படை B. நகரம், மதில், வாயில் கதவு என்பவற்றுடன் முழுமையான பாதுகாப்பு அமைப்புடன் கட்டி எழுப்பப்பட்டிருந்தது. C. கோட்டைகளை நிர்மாணிப்பதும், பாதுகாப்பு இடங்களிலே காவலரண்கள் அமைப்பதும்.	
		iii.		<u>மேலிருந்து கீழ்</u>	
			1.	தொரமடலாவ	
			2.	அகலஹஸ	
				<u>இடமிருந்து வலம்</u>	
			3.	அசோக மாலா	
			4.	புத்ததாஸ	
			5.	வசபன்	